**TC –157/2018** Dt: 29.11.2022

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No. /2022 Dt–29.11.2022 ம் தேதி அனுமதிக்கப்பட்டு பு.த.சா.1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of November 2022.

29.11.2022

பு.த.சா.1–ராமச்சந்திரன், த/பெ.ராமமூர்த்தி

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் முதுகுளத்தூர் ஊரைச் சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். எதிரி சிவகங்கை மாவட்டம், இளையாங்குடி ஊரைச் சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான். இளையாங்குடியில் எனக்கு உறவினர்கள் யாரும் இல்லை. எனக்கு ஒரு பையன், ஒரு பெண்ணும் உள்ளார்கள். படிப்பை முடித்துவிட்டார்கள்.

2) எனது மனைவி வேலை பார்க்கவில்லை. எனது மகள் 5,6 மாதங்களாக வேலை பார்க்கிறாள். நான் பெரிய அளவில் மொத்த மீன் வியாபாரம் செய்கிறேன். எல்லா இடங்களுக்கும் மீன் சப்ளை செய்வேன். நான் மீன் வியாபாரம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3) என்னிடமிருந்து மீன்களை சில்லரை வியாபாரத்திற்கு வாங்கிச்செல்வார்கள். எனது கடையின் பெயர் RR மீன்கடை. நான் வைத்திருக்கும் கடைக்கு ஆவணங்கள் ஏதும் இல்லை. பேரூராட்சி்க்கு வரி செலுத்தி வருகிறோம். வரிக்கு இரசீது கிடையாது. எதிரியை எனக்கு 16 வருடங்களாக தெரியும்.

4) நான் எதிரியை பார்த்தது கிடையாது என்று சொன்னாலும், முதன் முதலில் நீதிமன்றத்தில் வைத்து தான் எதிரியை பார்த்துள்ளேன் என்று

சொன்னாலும் சரியல்ல. எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் எதிரி இளையாங்குடியில் கல்யாண மண்டபம் வைத்துள்ளார். வெளிநாடுக்கு சென்று வருவார்.

5) எதிரியின் குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள் தெரியுமா என்றால் எனக்கு எதிரியை மட்டும் தான் தெரியும். எதிரியை நிரூபண வாக்குமூலத்திலும், புகார் மனுவிலும் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளதில் எவ்வாறு தெரியும் என்றால் மீன் வியாபாரம் செய்வதற்காக செல்லும்போது பழக்கத்திலிருந்து தெரியும். நான் கூறுவது அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல.

6) எனக்கு சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக ரோடு விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் விபத்தில் ஏற்பட்டு 3 வருடங்களாக நான் நடக்கமுடியாமல் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1 மாதம் மட்டும் தான் நடக்க முடியாமல் இருந்தேன்.

7) எதிரியை எனக்கு நேரடியாகத் தான் தெரியும். வேறு யாரும் எனக்கு எதிரியை அறிமுகப்படுத்தவில்லை. எதிரி எனக்கு உறவினர் கிடையாது என்றால் சரிதான். எதிரி பணம் கேட்டவுடன் பணம் கொடுத்துவிட்டீர்களா என்றால் 10 நாட்கள் கழித்து தான் கொடுத்தேன். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததற்கு முன்பாக எதிரிக்கும் எனக்கு பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை.

8) 15.10.2017 ம் தேதி எதிரி என்னிடம் பணம் வாங்கிய அன்றைய தினமே காசோலை கொடுத்தார். எதிரி பணத்தை பெற்றுக்கொண்டு காசோலையை எழுதி கொடுத்தார். எதிரிக்கு நான் பணம் கொடுக்கும்போதும், எதிரி எனக்கு காசோலை கொடுக்கும்போதும் என்னையும், எதிரியையும் தவிர வேறு நபர்கள் யாரும் கிடையாது.

9)அன்றைய தினமே எதிரிக்கு ரூ.2000 நோட்டாக 450 தாள்கள்

கொடுத்தேன். வீட்டிலிருந்து தான் எடுத்துக்கொடுத்தேன். வங்கியில் இருந்து எடுத்துக்கொடுக்கவில்லை. நான் வியாபாரம் செய்வதால் எனது கையில் எப்போதும் பணம் இருக்கும். யாரிடமும் கடன் வாங்கி கொடுக்கவில்லை.

10) நான் வருமான வரி தாக்கல் ஏதும் செய்யவில்லை. ரூபாய் 5 இலட்சத்திற்கு மேலாக காசோலை மூலமாக பணம் கொடுக்க வேண்டும் என்றால் குறுக்கு கோடிட்ட காசோலையில் தான் கொடுக்க வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியை என்னைத் தவிர என்குடும்பத்தில் உள்ள வேறு நபர்களுக்கு தெரியாது.

11) என் குடும்பத்தில் உள்ள நபர்கள் யாரிடமாவது எதிரி கடன் வாங்கியிருக்கிறாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இதே நீதிமன்றத்தில் நான் STC No 155/2018 என்ற வழக்கில் ரூ.5 இலட்சம் கடன் கொடுத்ததாக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

12) எதிரி பணத்தைக் கொடுத்து காசோலையை பெற்றுக்கொள்வதாக கூறினாரா என்றால் இல்லை. எதிரி காசோலையை வங்கியில் செலுத்தி பணமாக்கி கொள்ள கூறினார். நான் எதிரியிடமிருந்து காசோலையை தவிர வேறு எதுவும் ஆவணங்கள் எழுதி வாங்கவில்லை.

13) எதிரி வேறு ஒருவருக்கு கொடுத்த காசோலையை நான் தவறுதலாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும், என்னால் எழுதப்பட்ட கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை.

14) சீதாலெட்சுமி எனது தங்கை ஆவார். எனது தங்கை சீதாலெட்சுமி எதிரி மீது ரூ.4 இலட்சம் புரோநோட் அடிப்படையில் கடன் வாங்கியதாக

முதுகுளத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 46/2021 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

15) எனது வழக்கறிஞர் எனக்கு தாய்மாமா என்று சொன்னால் சரிதான். தர்மலிங்கம் மற்றும் தர்மராஜ் என்பவர் எதிரி மீது காசோலை வழக்கு தொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தர்மராஜ் எனது தாய்மாமா. எதிரிக்கும் என்னை யார் என்று தெரியாது என்றாலும், அதேபோல் எனக்கு எதிரியை பற்றி தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல.

16) 2014 ஆம் வருடம் எதிரி எனது வழக்கறிஞரிடம் ரூ.13 இலட்சம் கடனாக வாங்கினார் என்றாலும், அப்போது 6 புரோநோட்டுகள் மற்றும் 6 காசோலைகளையும் எனது வழக்கறிஞரிடம் கொடுத்து வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி எதிரி பணத்தை முழுவதும் திரும்ப செலுத்திவிட்டு மேற்படி காசோலையையும், புரோநோட்டையும் கொடுக்க மறுத்து அதில் உள்ள ஒரு காசோலையை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

17) எனது தாய்மாமாவின் பேச்சைக் கேட்டு வழக்கை தொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் படி வழக்கு நிலைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி பிணையமாக கொடுத்த காசோலையை பயன்படுத்தி இந்த புகார் தாக்கல் செய்யப்பட்டது ஏற்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.